அசல்வழக்கு எண் 6298/2021

தேதி 06.12.2024

பெயர் K. Ravi (PW-1)

<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்</u>

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

வா.சா.ஆ 1 எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 21.12.2015 ல். வழக்கு தாக்கல் செய்த போது வாங்கப்பட்டு பின்தேதியிட்டு வா.சா.ஆ 1 தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1, பத்தி 6 sub clause (a) ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ 51750/-, 01.10.2015 முதல் வாடகை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 ல் முதல் பத்தி, கடைசி நான்கு வரிகளில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ 45000/- வாடகையை 01.10.2015 முதல் நான்கு ஆண்டுகளுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1ல் lessor என்ற இடத்தில் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ 1ல் 1 மற்றும் 5 வது பக்கத்தில் lessee என்ற இடத்தில் பிரதிவாதி கையொப்பம் போடவில்லை என்றும் இது நானாகவே போட்ட கையொப்பம் என்றால் சரியல்ல. கொரோன தொற்று நோய் காலக்கட்டமான மார்ச் 2020 முதல் ஆகஸ்ட் 2020 வரை மத்திய அரசும், மாநில அரசும் எல்லா

வணிக வளாகங்களை மூடுமாறு உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் ஜூன் 2020 ல் இவர் கடையை திறந்துவிட்டார். தனிநபர் குடோன் ஜூன் 2020 ல் திறக்கப்பட்டது என்றும் வணிக வளாகங்கள் மற்றும் மால்கள் ஆகஸ்ட் 2020 வரை மூடப்பட்டு இருந்தது என்றால் பொய். பிரதிவாதி மார்ச் 2020 முதல் ஆகஸ்ட் 2020 (lockdown) வரைக்கான காலக்கட்டத்தில் வாடகை தள்ளுபடி கேட்டார் என்றும் அவ்வாறு நான் கொடுத்தேனா என்றால் அவர் கேட்கவும் இல்லை, நான் கொடுக்கவும் இல்லை. அவர் lockdown காலக்கட்டமான 6 மாதங்களுக்கு வாடகை தள்ளுபடி கேட்டார் என்றும் நான் அது சம்மந்தமாக முடிவு எதுவும் எடுக்காததால் நான் சட்டத்திற்கு முரணாக குடோன் பூட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் குடோன் பூட்டியதால் அவர் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து குடோன் திறப்பதற்கு உத்தரவு பெற்றார் என்றால் சரி, அவரே பூட்டிவிட்டு அவரே உத்தரவு பெற்றுக் கொண்டார். நான் உயர்நீதிமன்றத்தில் அவரே பூட்டிக் கொண்டார் என்று தெரியப்படுத்தி அதற்கு உயர்நீதிமன்றம் ஏதேனம் உத்தரவு பிறப்பித்ததா என்றால் நான் எதிர் உரை தாக்கல் செய்யவில்லை. நான் சட்டத்திற்கு முரனாக குடோன் பூட்டியதால் தான் நான் உயர்நீதிமன்றத்தில் அவரே கடையை பூட்டிவிட்டார் என்று எதிர் உரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 06.01.2021 ல் குடோன் பூட்டிவிட்டு 02.03.2021 ல் உயர்நீதிமன்றம் உத்தரவுக்கு பிறகு தான் குடோன் பூட்டை திறந்தேன் என்றால் நான் எதுவும் திறந்துவிடவில்லை, அவரே திறந்து கொண்டார். அந்த காலக்கட்டத்தில் அவர்

குடோனில் இருந்த ரூ 42 லட்சம் மதிப்புள்ள பேப்பர் மற்றும் ரூ 2 லட்சம் மதிப்புள்ள பேப்பர் மினி லாரியில் இருந்தது என்றும் அதை நான் detain செய்ததால் அவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 55000/- நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, மினி லாரியின் சாவி என்னிடம் இல்லை. நான் மினி லாரியின் டயர்களை பஞ்சர் செய்து அந்த வண்டியை எடுக்கவிடாமல் இரண்டு ரவுடிகளை செக்யூரிட்டியாக போட்டதால் 55 நாட்களுக்கு லாரியும் எடுக்க முடியவில்லை, குடோனையும் திறந்து வாடிக்கையாளர்களுக்கு சரக்கு தர இயலவில்லை என்றால் சரியல்ல. நான் 55 நாட்கள் சட்டத்திற்கு முரனாக பூட்டியதால் அவருடைய பெரும்பாலான regular customers அவரை விட்டு சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு முரனாக குடோனை பூட்டியதால் பிரதிவாதியின் regular customers மற்ற dealer களிடம் சரக்கு வாங்க சென்று விட்டதால் அவருக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6, 7 மற்றும் 8 ஐ வேண்டுமென்றே அக்டோபர் 2019 முதல் 31.03.2021 வரை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றும் வா.சா.ஆ 1 ல் உள்ள 21.12.2015 தேதி முதல் உண்டான statement of account ஐ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பிராதில் பிரதிவாதி proprietor என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. பிராதில் 21.12.2015 முதல் அவர் 3 ஆண்டுகளுக்கு ரூ 45000/- மாத வாடகை கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. என் பிராது 2 வது பத்தியில்

மே 2020 வரை வாடகையை bank transfer செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிராது 3 வது பத்தியில் பிரதிவாதி ஜூன் 2020 வரை ரூ 10,32,396/- கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிராது 4 வது பத்தியில் பிரதிவாதி ஏப்ரல் 2021 வரை ரூ 916372/- கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதற்கு அடுத்த 4 வது பத்தியில் 03.07.2021 ல் பிரதிவாதி கொரியர் மூலம் குடோனின் சாவியை அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிராது 5 வது பத்தியில் 30.06.2021 வரை முன்பணத் தொகையான ரூ 5 லட்சத்தை கழித்துவிட்டு மீது தொகை ரூ 5,32,396/- பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பி.வா.சா.ஆ 1 ல் சொல்லியவாறு ஏப்ரல் 2020 வரை பிரதிவாதி மாத வாடகையாக ரூ 51750/- கொடுத்துள்ளார் என்றால் சரி. நான் இதை மறைப்பதற்காக தான் 2015 முதல் 2019 அக்டோபர் வரைக்கான bank statement of account ஐ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய வாடகை ரூ 51750/- ஐ மறைத்துவிட்டு பிரதிவாதி மாத வாடகை ரூ 45000/- கொடுத்தார் என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் முதல் பக்கத்தில் சொல்லியுள்ள விவரங்களை மாற்றி சரியல்ல என்று தற்போது சொல்கிறேன் என்றால் தவறு. நான் பிராதில் 01.10.2018 முதல் மாத வாடகை ரூ 59512/- நிர்னயம் செய்யப்பட்டதாக சொல்லியுள்ளதால் அந்த விவரத்தை எந்த கடிதம் மூலமாக தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. Due to demonetization,

Due to implementation of GST and Covid – 19 pandemic ல் என் அப்பா பிரதிவாதியிடம் மாத வாடகை ரூ 51750/ கொடுத்தால் போதும் புது agreement போடும் போது வாடகையை உயர்த்திக் கொள்ளலாம் என்று சொன்னார் என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு முரனாக குடோனை பூட்டியதால் பிரதிவாதிக்கு ரூ 24,20,000/- நஷ்டம் ஏற்பட்டது என்றும் நீதிமன்ற கட்டணம் அதிகமாக இருந்ததால் 50% தொகையான ரூ 12,10,000/- claim செய்து counter claim தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பதில் வழக்குரை, சட்ட அறிவிப்பு, counter claim ஆகியவற்றில் பிரதிவாதி தான் proprietor அல்ல partner என்று தெரிவித்த போதிலும் நான் அவரை proprietor என்று தான் சொல்கிறேன் என்றால் எனக்கு தகவல் தெரியவில்லை. என்னுடைய அத்து மீறிய செய்கையால் தான் பிரதிவாதிக்கு மன உலைச்சல் ஏற்பட்டது என்றும் அவருக்கு வியாபாரத்திலும் நஷ்டம் ஏற்பட்டது என்றும் அதனால் அவர் தன்னிச்சையாக 02.07.2021 ல் காலி செய்துவிட்டு என்னிடம் சாவியை ஒப்படைத்தார் என்றால் சரியல்ல, அவர் என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை, கொரியர் மூலம் அனுப்பினார். நான் வேண்டுமென்றே என் அப்பா போட்ட lease deed ஆன பி.வா.சா.ஆ 1 மறைத்துவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவர் என் மீது காவல் நிலையத்திலும் உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்ததால் தான் நான் வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்தேன்

என்றால் சரியல்ல. நானும், என் அப்பாவும் சமூக விரோதிகளும் சேர்ந்து பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை